Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 36 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.1**

| Name: | ஷர்மிளா | Calling: | மாணவி |
|---|---|---|---|
| Father's Name: | ஆறுமுகம் | Religion: | இந்து |
| Village: | அம்பலூர் | Age: | 21 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.09.2023

| SIGN : |
|---|

(எதிரி ஆஜர்)

அ.சா. 1 முதன்மை விசாரணை.

02.01.2023 ம் தேதி காலை 08.00 மணி அளவில் நான் கல்லூரிக்கு சென்று விட்டு மத்தியம் 01.00மணி அளவில் கல்லூரியில் இருந்து வீடு திரும்பினேன். அப்பொழுது பொது வழியில் ரமேஷ் என்பவர் ரோடு போட்டுக்கொண்டுஇருந்தார் அவரது மனைவி குமாரி வார்டு மெம்பர் ஆவார். அவர்கள் சாலை போட்டுக்கொண்டு இருந்தது எனக்கு தெரியாது. என் வீட்டிற்கு செல்வதற்கு அது தான் ஒரே வழி. ஆனால் குமாரி என்னைப் பார்த்து வெளியே சொல்லமுடியாத அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவரது கணவர் ரமேஷ் என்பவர் என்னை இடது பக்க கன்னத்தில் கையால் அறைந்தார். பின்பு என்னை கழுத்தை பிடித்து சுவற் மீது தள்ளி எங்கெயாவது சொத்து ஓழிந்துபோக வேண்டியது தானே என்று கூறினார். அந்த சமயத்தில் என் வீட்டில் யாரும் இலலை. எனது தந்தை மற்றும் தாயார் கூலிவேலை செய்வதற்காக சென்று இருந்தார்கள். அவர்களுக்கு தொலைபேசி மூலம் நடந்தை கூறினேன். அவர்கள் வந்தார்கள் எனக்கு மயக்கமாக இருந்ததால் என்னை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அசாஆ 1

ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு வாய்தாக கேட்டு அது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது. )

சாட்சி கையொப்பம்
(ஒம்./-) ஷர்மிளா

**Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.**

**(Sd./-) R.S.Praganthaa,**
**Judicial Magistrate, Vaniyambadi.**

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 36 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரமணி | Calling: | கூலி |
| Father's Name: | க/பெ.ஆறுமுகம் | Religion: | இந்து |
| Village: | அம்பலூர் | Age: | 44 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 15.09.2023

SIGN :

(எதிரி ஆஜர்)

அ.சா. 2 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரியை தெரியும். அசா 1 எனது மகள் ஆவார். கடந்த 02.01.2023 ம் தேதி நாஙகள் பணிக்கு சென்று இருந்தோம் எனது மகள் ஷர்மிளா கல்லூரிக்கு சென்று விட்டு மதியம் 01.00மணிக்கு வீடு திரும்பி எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ரமேஷ் என்பவர் தன்னை அடித்ததாகவும், ரமேஷ்ம் அரவதுமனைவியும் வீட்டிற்கு செல்லும் வழியில் தகாத வார்த்தையால் எனது மகளை பேசி வீட்டிற்கு செல்ல வழிவிடாமல் எனது மகளின் கழுத்தை பிடித்து சுவரில் தள்ளி நீ செத்துஒழிய வேண்டியது தானே என்று கேட்டதாக அழுது கொண்டு என்னிடம் சொன்னார். நானும், எனது கணவரும் வேலை செய்யும் இடத்தில்இருந்து உடனே புறப்பட்டு வீட்டிற்கு வந்தோம். எனது மகளை பார்த்த போது அவருக்கு இடது கன்னம் வீங்கியிருந்தது. கழுத்தைநெருக்கியதில் உள்ளே வலி இருப்பதாக சொன்னார். கழுத்தை நெருக்கியதால் அதனுடைய அடையாளம் கருப்பாக மேலே காணப்பட்டது .பின்னர் அவரை அழைத்துக்கொண்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைதது சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு வாய்தாக கேட்டு அது நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது. )

சாட்சி கையொப்பம்
(ஓம்./-) ரமணி

**Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.**

**(Sd./-) R.S.Praganthaa,**
**Judicial Magistrate, Vaniyambadi.**